எதிர்க்கட்சியினர் தாக்கித் தாக்கி வலுவை இழக்கின்றனர்! தாங்கித் தாங்கி

முதல்வர் வலுவைப் பெறுகிறார்! திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்போம் - தமிழ்நாட்டைக் காப்போம்!

சட்டப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை விவாதத்தில் – ஐ.பி.செந்தில்குமார் பேச்சு!

சென்னை, பிப்.21-

சட்டப் பேரவையில் நேற்று இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் பழநி தொகுதி ஐ.பி. செந்தில்குமார் பேசுகையில், எதிர்க்கட்சியினர் தாக்கி தாக்கி வலுவை இழக்கின்றனர். நமது முதல்வர் தாங்கி தாங்கி வலுவைப் பெறுகிறார். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்து தமிழ்நாட்டை காப்போம் என்று பேசினார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது :-

2021 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் மக்கள் விரும்பிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு பிறகு, மக்கள் தலைவர் திராவிட மாடல் நாயகர் அவர்கள் தலைமையில் 7-5-2021-ல் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று, இன்றுவரை இந்த அவையில் பல்வேறு வரலாற்று சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

18-2-2026 இன்று ஒன்றிய, மாநிலங்களுக்கான உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவினுடைய அறிக்கை, மாநில சுயாட்சி, மாநில உரிமைகள் குறித்து Justice Kurian Joseph அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது கடந்த 16-2-2026 அன்று அறிக்கையை தந்திருக்கிறது.

நம்முடைய வரலாற்று நாயகர் முதல்வர் அவர்கள் அந்த அறிக்கையை இந்த அவைக்கு கொடுத்திருக்கிறார்கள். அதில் மலர்க மாநில சுயாட்சி, நிச்சயம் உருவாக்குவோம் இந்திய கூட்டாட்சி என்கின்ற அந்த ஒற்றை மந்திரத்தோடு இன்றைக்கு ஒரு வரலாற்று தீர்மானத்தை இந்த அவைக்கு கொடுத்திருக்கிறார்கள்.

முதல்வருக்கு ஒவ்வொரு குடும்பத்தினரும் நன்றி!

பெருமையோடு இந்த அவையில் நின்று பேசுகின்றேன். இந்த அவையினுடைய தொடர் தொடங்குவதற்கு முன்பு நாங்கள் எல்லாம் எங்களுடைய பகுதிகளிலிருந்து இந்த அவைக்கு வருகிறபொழுது எங்கள் பகுதியைச் சேர்ந்த மக்கள், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மக்கள், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் எங்களை நேரில் சந்தித்தபொழுது எங்களிடத்தில் சொன்னது, நீங்கள் எப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பார்த்தாலும் எங்கள் குடும்பத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொருவருடைய நன்றியையும் நாங்கள் முதல்வர் அவர்களுக்கு சொல்லி இருக்கிறோம் என்று போய்ச் சொல்லுங்கள் என்று எங்களிடத்தில் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி என்று சொன்னால், அதிகாலை 5.52 மணிக்கு அலைபேசி வரத் தொடங்குகிறது. என்னவென்று கேட்டால், எங்கள் வங்கிக் கணக்குகளுக்கு ரூ.5,000 வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியை மக்கள் எங்களிடத்தில் சொன்ன அந்த அகம் மகிழ்ந்த நிகழ்வுகளை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆக, மக்களுடைய உணர்வுகளை புரிந்துகொண்ட ஒரு தலைவராக, மக்கள் தலைவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாக அமைந்திருக்கிறது.

நம்முடைய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அவர், ஜனநாயகம் என்பது வெறும் அரசாங்க வடிவம் மட்டுமல்ல, இது முதன்மையாக இணைந்த வாழ்க்கை முறை. ஒருங்கிணைந்த தொடர் அனுபவம். இது அடிப்படையில் சக மனிதர்களிடம் மரியாதை மற்றும் பயபக்தியுடன்கூடிய மனப்பான்மை என்கிற ஒரு சொல்லை சொல்லி இருக்கிறார். ஆனால், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தளவில், ஒன்றிய அரசு, மாநில அரசுகளை நியாயமற்ற முறையில் நடத்திய நிகழ்வுகளின் தொடர்ச்சியாக நம் திராவிட மாடல் அரசு எதிர்கொண்டு வரும் சவால்கள் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ்நாடு கண்டிராத ஒன்றாக இன்றைக்கு அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கவில்லை!

ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான நிதியை விடுவிக்காமல் நிறுத்தி வைப்பதும், மாநிலங்களுடனான உரிய ஆலோசனையை மேற்கொள்ளாமல் வரி விகிதங்களை சீரமைப்பதும் என்கின்ற வகையில், உதாரணத்திற்கு, ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்திற்கான மானியங்களான ரூ.3,548 கோடியை கொடுக்காமல் மறுப்பது, ஜல்ஜீவன் இயக்கத்திற்கு ரூ.3,112 கோடி நிதியை கொடுக்க மறுப்பது, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிக்குழு பரிந்துரைப்படி விடுவிக்கப்பட வேண்டிய ரூ.2,246 கோடியை கொடுக்க மறுப்பது,-- மெட்ரோ இரயில் திட்டத்திற்கு 63 ஆயிரம் கோடி ரூபாயை நாங்கள் பெற்று வந்தோம் என்று முனுசாமி அவர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்.

இன்றைக்கு அதே மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு கொடுக்க வேண்டிய 50 சதவிகித அவர்களுடைய பங்குத் தொகையை இதுவரை கொடுக்கவில்லை. நீங்கள் எல்லாம் கூட்டணி வைத்திருக்கிறீர்களே உங்களுடைய தோழமையாக இருக்கக்கூடிய ஒன்றிய அரசினிடத்தில் நம்முடைய மாநிலத்தின்மீது,-- நீங்கள் உத்தரபிரதேச மாநிலத்தைப் பற்றி இங்கே பேசினீர்கள். நான் உங்களிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்கும், எனக்கும் தமிழ்நாட்டில் சக உரிமை இருக்கிறது என்கிற உணர்வோடு சொல்கிறேன். உத்தரபிரதேசத்தைப் பற்றி பேசிய அண்ணன் அவர்களே, தமிழ்நாட்டிற்கு மெட்ரோ இரயில் திட்டத்திற்கு பாரதிய ஜனதா அரசு கொடுக்க மறுக்கிற அந்த 50 சதவிகித பங்குத் தொகையை மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களிடத்திலிருந்து கேட்டு நீங்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதைத் தொடர்ந்து 16-வது நிதிக் குழுவில் உயர்வு கேட்டு ஒவ்வொரு மாநிலங்களும் ஒன்றிய அரசிடத்தில் நின்றிருக்கிறது. அதிலே நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகத்திற்கும், கேரளாவிற்கும் 23.74 சதவிகிதம், 13.27 சதவிகிதம் என்று கொடுத்த ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு 0.44 சதவிகிதத்தைத்தான் கொடுத்திருக்கிறது. எவ்வளவு பெரிய ஓரவஞ்சனை. நியாயமற்ற நிபந்தனைகளுடன்கூடிய திட்ட செலவினங்களை மேற்கொள்ள கட்டாயப்படுத்துவது உள்ளிட்ட தமிழ்நாட்டின் நிதிநிலையில் செயற்கையான ஒரு நெருக்கடியை இன்றைக்கு ஒன்றிய பாரதிய ஜனதா அரசு உருவாக்கி இருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட ஒரு நெருக்கடி நமக்கு இருந்தபோதிலும், 2021-லிருந்து 2026 வரை இந்த நான்கரை ஆண்டுகளில் மாநில உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் வருவாய் பற்றாக்குறை விகிதத்தை 2.25 சதவிகிதத்தி லிருந்து 1.20 சதவிகிதத்திற்கு நம்முடைய திராவிட மாடல் அரசு, நம்முடைய நிர்வாக சீர்திருத்தத்தின் காரணமாக பொருளாதாரத்தின்மீது அவர்கள் முனைப்போடு காட்டுகிற அக்கறையோடு இன்றைக்கு நிகழ்த்திக் காட்டியிருக்கிறது.

அதேபோன்று மாநிலத்தின் மொத்த உள்நாட்டு மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் போக்கு, 2021-2022-ல் 3.56 சதவிகிதம் என்றிருந்ததை, இன்றைக்கு 3 சதவிகிதத்திற்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் அதிகரிப்பு!

நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள் பொதுவாக பல்வேறு இடங்களில் பேசுகிறார்கள். ஒவ்வொரு தனி நபர் தலையின்மீது இன்றைக்கு 2,25,000/- ரூபாய் கடனை வைத்திருக்கிறோம், வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் இன்றைக்கு இந்த அவையில் சொல்கிறேன், ஒன்றிய அரசின் புள்ளியியல் துறை ஒரு பொருளாதார அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதில், இந்திய மாநிலங்களில், தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் என்பது இன்றைக்கு 3.62 இலட்சம் ரூபாயை தொட்டிருக்கிறது; இது நாட்டின் சராசரியைவிட 1.77 சதவிகிதம் அதிகம் என்று சொல்லி, வாங்கும் திறன், குடும்பப் பொருளாதாரப் பாதுகாப்பு, சிறந்த வாழ்க்கை முறை என்கிற வகையில் இன்றைக்கு தமிழ்நாடு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோன்று உயர்கல்வியைப் பற்றி இந்த அவையில் பேசுகின்றார்கள். ஒட்டு மொத்த தமிழ் நாட்டில் உயர்கல்வியில் மாணாக்கரின் சேர்க்கை விகிதம் என்பது, இன்றைக்கு 47 சதவிகிதமாக இருந்தாலும், இந்திய அளவில் இன்றைக்கு ஏறத்தாழ இரண்டில் ஒருவர் கல்லூரிக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலையை தமிழ்நாடு கண்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 7.5 சதவிகிதத்தைப் பற்றி அவையில் பேசினார்கள். அமைச்சர் பெருமக்கள் அனைவரும் அவற்றிற்கு விளக்கங்களைக் கொடுத்தார்கள். மருத்துவப் படிப்பிற்கென்று இருந்ததை பல்வேறு துறைகளுக்கு விரிவுபடுத்தி, இன்றைக்கு இரண்டில் ஒருவர் கல்லூரியில் படிக்கக்கூடிய வாய்ப்பை தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது. வேலைவாய்ப்பு வளர்த்தைப் பொறுத்தளவில் தமிழ் நாட்டில் தொழிலாளர் பங்கேற்பென்பது 72.1 சதவிகிதம் இன்றைக்கு உயர்ந்த நிலையிலிருக்கிறது. வேலையின்மையைப் பொறுத்தளவில், 3.5 சதவிகிதமாக அதைக் குறைத்து இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவிலேயே, தொழிலாளர்களை அதிக அளவில் பெற்ற மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், இந்தியாவில் இன்றைக்கு 100 நபர்கள் இருக்கிறார்கள் என்றால், அவற்றில் 15 நபர்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் நாயகர் அவர்களுடைய அரசு அதனை சாதித்திருக்கிறது.

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.”

என்று வள்ளுவர் குறள் வகுத்திருக்கிறார். அந்த வள்ளுவனின் குறளுக்கு நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நிதியாதாரங்களை வகுத்து, அரசாங்க கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்து, திட்டமிட்டு செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணம் என்று சொல்லியிருக்கிறார். அந்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக, திராவிட மாடல் நாயகன் அண்ணன் மாண்புமிகு தளபதியாருடைய அரசு, இந்த நான்காண்டுகளில், “உங்களுடன் ஸ்டாலின்” என்கிற திட்டத்திற்கான முகாம் நடத்தப்பட்டிருக்கிறது. 10,000 முகாம்களில் 38.48 இலட்சம் பேருக்கு தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நலன் காக்கும் ஸ்டாலின் முகாம்கள், நேற்றைக்கு முன்தினம் வரையில், 1,206 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் 17,82,687 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள். ‘இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48’ என்கிற திட்டத்தின்மூலம் இன்றைக்கு 5,11,916 நபர்கள் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

மக்களைத் தேடி மருத்துவம் என்கிற உயரிய திட்டத்தின்மூலம் இன்றைக்கு முதல் முறை சேவைகள் 2 கோடியே 53 இலட்சம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 4 கோடியே 75 இலட்சம் பயனாளிகளுக்கு தொடர் சேவைகளை இந்த அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது. இதன்மூலமாகதான் 2024 ஆம் ஆண்டில் நம்முடைய ஐ.நா. அமைப்பின் “United Nations Inter-Agency Task Force Award” என்கிற award தமிழ் நாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கிற தென்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாயுமானவர் திட்டம்!

தாயுமானவர் என்கிற திட்டத்தின் மூலமாக 70 வயதைத் தாண்டிய மாற்றுத் திறனாளி சகோதரர்களுக்கு 27,40,703 நபர்களுக்கு அவர்களுடைய வீடுகளுக்கே சென்று பொது விநியோகத் திட்டத்திற்கான பொருட்களை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கும் முயற்சியை இன்றைக்கு இந்த அரசு செய்து காட்டியிருக்கிறது.

நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அன்புக் கரங்கள் என்கிற திட்டத்தின் மூலமாக 10,637 ஆதரவற்ற குழந்தைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் தாயாகவும், தந்தையாகவும் இருந்து 2,000 ரூபாயை மாதந்தோறும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று இன்றைக்குக் கல்லூரிகளில் படிக்கக்கூடிய ஏழை எளிய வீட்டுப் பிள்ளைகள் 12,36,207 பேருக்கு புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாதந்தோறும் 1,000/- ரூபாய் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களின் அரசு, நான் முதல்வன் என்கிற திட்டத்தைக் கொண்டு வந்தது என்று அவையில் பேசிய சகோதரர்கள் அனைவரும் சொன்னார்கள். தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நிறுவனத்தின் சார்பில் இதுவரை 48,66,050 நபர்களுக்கு அந்த நிறுவனத்தில் இணைத்து அவர்களுக்கான திறன் பயிற்சிக்கான சான்றுகளை அவர்களுக்கு வழங்கி வழிகாட்டியிருக்கிறது.

அதன்காரணமாகத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே, கடந்த ஆண்டு நடைபெற்ற குடிமைப் பணி தேர்வில் 59 பேர் IAS, IPS, IRS தேர்வில் வெற்றி பெற்றார்கள். அதில் 52 பேர் நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெற்ற ஏழையெளிய வீட்டுப் பிள்ளைகள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பேசுகிறபோது சொன்னார்களே, கல்லூரிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு மடிக்கணினி கொடுக்கிறீர்கள், நீங்கள் பள்ளிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகளையும் கருணையோடு பார்க்க வேண்டும் என்று சொன்னார்களே, முனுசாமி அவர்கள் பேசுகிறபோது எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தை கொடுத்ததை குறிப்பிட்டுச் சொன்னாரே, நான் இந்த நேரத்திலே சொல்கிறேன். உலகத்தில் எந்த நாட்டிலும் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம் எங்களுடைய முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) 1-5 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய ஏழையெளிய வீட்டுப் பிள்ளைகளுக்கு 19 இலட்சத்து 34 ஆயிரம் பேருக்கு காலை உணவுத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது, தமிழ்நாட்டில் தான் இன்றைக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

மகளிர் சொந்தக் காலில் நிற்க திட்டங்கள்!

மகளிர் வாழ்வு மேம்படவேண்டும். அவர்கள் தங்கள் சொந்த காலில் நிற்க வேண்டும். மகளிர் பொருளாதாரம்தான் நாட்டினுடைய உயர்வுக்கு அடித்தளம் அமைக்கும் என்று தந்தை பெரியார் சொன்னார். தந்தை பெரியாரின் கூற்றை நிறைவேற்றுகின்ற அவரது உண்மை தொண்டனாக எங்கள் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 1 கோடியே 31 இலட்சம் குடும்பங்களுக்கு 1 கோடியே 31 இலட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாயை கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த வேளையில், எங்கள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 1989-ல் தருமபுரி மாவட்டத்தில் கொண்டு வந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்த நான்கரை ஆண்டுகளில் 6 இலட்சத்து 23 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கிட்டத்தட்ட 1 இலட்சத்து 41 ஆயிரத்து 718 கோடி ரூபாயை இன்றைக்கு குறைந்த வட்டியில் கடனாகக் கொடுத்து பெண் சமூகம் உயர்ந்தால், இந்தத் தமிழ்ச் சமூகம் நிமிர்ந்து நிற்கும் என்கிற உணர்வோடு கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

குடிதண்ணீர் இந்த நாட்டில் வாழ்கிற மக்களுடைய அவசியத் தேவையாக இருக்கிறது. எனவே தான் இந்த அரசு பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் 87 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஏறத்தாழ 15,591 கோடி ரூபாயில் சுமார் 65 இலட்சம்பேர் பயன்பெறக்கூடிய ஒரு திட்டத்தை கொடுத்திருக்கிறார். அதில் பயனடைந்தவன் நானும் ஒருவன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நன்றியோடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுக் குடிநீர் திட்டம்!

ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும், ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து கேட்டோம், கிடைக்கவில்லை. ஆழியாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டது. விவசாயிகள் போராட்டத்தால் நிறுத்தப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் காவிரியில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொடுத்து ஏறத்தாழ ரூ.1,060 கோடியில், அந்தத் திட்டம் 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு, கடந்த வாரம் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கே வருகை தந்து, அந்தத் திட்டத்தினுடைய முதற்கட்ட முடிந்த பணிகளை தொடங்கி வைத்து, இன்றைக்கு அது திண்டுக்கல் மாவட்டத்திலே பழனி, ஒட்டன்சத்திரம் மட்டுமல்ல அருகில் இருக்கக்கூடிய ரெட்டியார் சத்திரம் ஒன்றியம், வடமதுரை, வேடசந்தூர், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஏறத்தாழ 1,422 குடியிருப்புகளுக்கு, ரூ.1,368 கோடியில் அந்தத் திட்டத்தினுடைய முடிந்த முதற்கட்டப் பணிகளை தொடங்கி வைத்து மக்களுக்கு அந்தச் சேவையை வழங்கியிருக்கிறார்கள்.

அரசு பணி 1 இலட்சத்து 55 ஆயிரத்து 131 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டுமனைப் பட்டாக்களை பொறுத்த அளவில் G.O. 97 இதை யாரும் மறந்துவிடக் கூடாது. அரசு நிலை எண் 97-ஐ உருவாக்கி இன்றைக்கு regularization என்கிற வடிவத்திலே ஏறத்தாழ தமிழ்நாட்டிலே belt area என்று சொல்லப்படுகிற சென்னை. அதேபோன்று மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் வாழுகிற மக்களுடைய அவர்கள் இருக்கும் இடத்திற்கு உரிமையான பட்டாக்கள் 23 இலட்சத்து 56 ஆயிரத்து 623 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள சாலை என்பது பொருளாதாரத்தின் இதயம் என்று சொல்வார்கள். அதை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறைக்கு கலைஞர் கனவு இல்லம் என்ற திட்டத்தில் 3 ஆண்டுகளில் 3 இலட்சம் வீடுகள், 1 இலட்சத்து 71 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது 29 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதியதாக இந்த ஆண்டிற்கு 1 இலட்சம் வீடுகளை கட்டுவதற்கு நிதியையும் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 20,484 கி.மீ. சாலைகளை ரூ.8,911 கோடியில் அமைத்து இன்றைக்கு கிராமப் புறங்களில் எந்த கிராமமாக இருந்தாலும், கிராமங்களுக்குச் செல்ல சாலை வசதியை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, முதலமைச்சர் அவர்களுக்கு இந்தநேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் நிதிநிலை அறிக்கை!

அதுமட்டுமல்ல, வேளாண்மை நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவில் நெல்லுக்கு கொடுத்த வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது. அதனடிப்படையில் தான் இந்த ஆண்டு சன்ன ரகத்திற்கு ரூ.2,545-ம், சாதாரண ரகத்திற்கு ரூ.2,500/- ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது)

குறிப்பாக, 18.48 கோடி ரூபாயில் 6,300 பயனாளிகள் அதிலே பயனடைந்திருக்கிறார்கள். தீவிர சிறப்பு முகாம்கள் நடத்தி, இந்த முகாம்கள்மூலம் 17,816 ஹெக்டேர் தென்னை பயிரிடப்பட்ட பரப்பு வேர் வாடல் நோயிலிருந்து மீட்கப்பட்டது. இதில் பயனடைந்தவர்களின் நானும் ஒருவன். இதனை தமிழ் நாட்டினுடைய அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். வேளாண் காடுகள் கொள்கை என்ற ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏனென்றுசொன்னால், இன்றைக்கு கிராமப்புறத்திலே மக்கள் அவர்கள் அதிகமாக பயிரிடக்கூடிய தேக்கு, செம்மரம், மகோகனி, அதே போல, சந்தனமரம். இந்த மரங்கள் நீண்ட காலப் பயிராக இருந்தாலும், பிற்காலத்தில் அந்தக் குடும்பத்திற்கு அம்மரங்கள் உதவும் என்ற வகையிலே பயிரிடுகிறார்கள். ஆனால், அந்த மரங்களை வெட்டுவதற்கு, அந்த மரங்களை வியாபாரப்படுத்துவற்கு இருக்கக்கூடிய இடையூறுகளைக் களைகின்ற வகையில் இந்த வேளாண் காடுகள் கொள்கை முழுவு இன்றைக்கு எடுக்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆக, இந்த நேரத்தில் (மணியடிக்கப் பெற்றது) நிறைவாக, . . .

இந்த நேரத்தில், ஒரே ஒரு விஷயம். தயவு செய்து, Please, என் தொகுதி சார்பில் ஒரு நன்றியைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், இந்த அரசு பொறுப்பேற்று-நான் இந்த அவையிலே தொடர்ந்து என்னுடைய தொகுதிக்கு கேட்ட கோரிக்கைகளில், பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நான் சொல்கின்றேன். முதலமைச்சர் அவர்கள் கிள்ளிக் கொடுக்கவில்லை. எனக்கு மட்டுமல்ல, அள்ளிக் கொடுத்திருக்கிறார், தமிழ்நாட்டு மக்களுக்கு! (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகின்றேன். பழனி அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தி, 80 கோடி ரூபாயில் இன்றைக்கு அந்தக் கட்டடப் பணிகள் முடிந்து, எஞ்சியுள்ள 5 சதவிகித பணிகள் முடிவுற்றவுடன் மக்கள் பயன்பாட்டுக்கு அது வழங்கப்பட இருக்கிறது. குறிப்பாக, பழனி கோவில் நகரம். அந்த கோவில் நகரத்திற்கு, இப்போதுகூட தைப்பூசத் திருவிழாவிற்கு ஏறத்தாழ எட்டு நாட்களில் 11 இலட்சம் பேர் வந்து சென்றிருக்கிறார்கள். ஆக, பழனி தொகுதியினுடைய முக்கியக் கோரிக்கையாக இருந்த, பழனி-தாராபுரம் சாலையில் ஒரு இரயில்வே மேம்பாலம், கடவு எண் 63, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு

மலைப்பகுதி மக்கள் கோரிக்கை!

நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு, அரசாணை பிறப்பிக்கப்பட்டு, 69 கோடியே 10 இலட்சம் ரூபாயில் அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மலைப்பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த எங்களுடைய மின்சாரப் பிரச்சினைக்கு ஒரு முதற்கட்டத் தீர்வைக் கொடுக்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் பண்ணைக்காட்டில் 110/22 கே.வி. துணை மின்நிலையம் ஏறத்தாழ 57 கோடியில் அமைப்பதற்குரிய அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு கோரிக்கைகள் மட்டும்தான். ஒன்று பச்சையாறு அணைத்திட்டம். மற்றொன்று, பொதுமக்கள் விரும்புகின்ற வகையில் புதிய பழனி மாவட்டத்தை எங்களுக்கு உருவாக்கித் தர வேண்டுமென்கிற கோரிக்கை. அதேபோல, கறிக்கோழி பண்ணையில் தொழிலாளர்களாக இருந்து, அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப் பெற வேண்டும். நம்முடைய மக்களைத் தேடி மருத்துவம். அந்த மருத்துவத்தால் ஏறத்தாழ 7 கோடி பேர் இன்றைக்கு பயனடைந்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு உழைத்து வருகின்ற அந்தத் தன்னார்வலர்களுக்கு ஊதிய உயர்வு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நம்முடைய அரசு கருணையோடு அவர்கள்மீது அக்கறையோடு அவர்களுக்கு, அந்த வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக, “எதிரிகள் தாக்கி, தாக்கி தங்கள் வலுவை இழக்கட்டும்! நீங்கள் தாங்கி, தாங்கி வலுவைப் பெற்றுக் கொள்ளுங்கள்!! (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகள் தாக்கி, தாக்கி தங்கள் வலுவை இழக்கட்டும்! நீங்கள் தாங்கி, தாங்கி வலுவைப் பெற்றுக் கொள்ளுங்கள்!!.” என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்னார். பேரறஞர் அண்ணா அவர்களுடைய கருத்தைத் தன் உள்ளத்தில் தாங்கி, தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்க, மாநில சுயாட்சிக் கொள்கையில் தடுமாறாமல், உறுதியாக நின்று, தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!! (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற தாரக மந்திரத்தை உள்ளத்தில் நிறுத்தி, மக்கள் தலைவர், திராவிட மாடல் நாயகன் அவர்கள் இன்றைக்கு உழைத்துக் கொண்டிருக்கிறார். நாமெல்லாம் அவருக்கு வழி நின்று, திராவிட மாடல் 2.0 அமைத்து, தமிழகம் காப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) கனவுகள் யார் வேண்டுமானாலும் காணலாம், கனவும் யார் வேண்டுமானாலும் காணலாம், அது அவர்களுடைய உரிமை. நாங்கள் பேசுவது கனவு அல்ல, எங்களுடைய இலட்சியம். திராவிட மாடல் 2.0 நாங்கள் நிச்சயம் அமைப்போம். வெல்வோம் ஒன்றாக! நன்றி, நன்றி.

இவ்வாறு ஐ.பி. செந்தில் குமார் பேசினார்.

தென்காசி வடக்கு மாவட்டம்

மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் டி.டி. ராமசந்திரன் அவர்களுக்குப் பதிலாக, **திரு. அ.ராஜதுரை** (233, மாரியம்மன் கோவில் தெரு, வென்றிலிங்கபுரம், பட்டாடைக்கட்டி, நடுவக்குறிச்சி, சங்கரன் கோவில், தென்காசி மாவட்டம்) அவர்கள் மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.ம